விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, சித்திரை ௨29 (11-5-68) ஸ்பர் 12 — புத்தகம் 22 இதழ் 34




# "அரசபணியை" சட்டரீதியாக அங்கீகரிக்க அரசு முடிவு?

அரசாங்க கடித உறைகளில் 'அரச பணி' என்று எழுதுவதற்குச் சட்ட பூர்வமாக அனுமதியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. ''ராஜ்ய சேவைய பினிசாய்'' என்ற சிங்களச் சொல்லுக்கு ஈடாக 'அரச பணி' என்ற தமிழ்ச் சொல்லையும் பயன்படுத்தக்கூடிய விதத்தில், அஞ்சல் சட்டத்தின் 8 வது சரத்தைத் திருத்தி அமைப்பது என்ற தபால் மா அதிகாரியின் ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

அஞ்சல் சட்டத்தின் 85-வதுசரத்துப்படி தற்பொழுது சிங்களமல்லாத வேறு எந்த மொழியிலாவது இந்த முத்திரையை உபயோகிப்பது தண்டிக்கப்படுவதற்குரிய குற்றமென்று கூறப்பட்டுள்ளது.

தபால் மா அதிகாரி, அட்டோர்னி ஜெனரலுடன் ஆலோசித்த பின்னர், ''ராஜ்ய சேவைய பினிசாய்'' என்ற சிங்களச் சொல்லுக்குச் சமதையாக 'அரச பணி' என்ற தமிழ்ச் சொல்லைப் பாவிப்பதற்கு நிதியமைச்சரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டார் என்று தெரிகிறது.



"வாழையை கொத்திய மரங்கொத்தி பறவை"

## காங்கிரசின் பயமுறுத்தலுக்கு பணிய பிரதமர் மறுப்பு

'மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால், தமிழ் காங்கிரஸ் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேற நேரிடும்'.

இவ்வாறு அண்மையில் தமிழ் காங்கிரசைச் சேர்ந்த இரு எம். பீக்கள் பிரதமரைச் சந்தித்துப் பயமுறுத்தியதாகவும், இப்பயமுறுத்தலுக்குத் தாம் பணிய முடியாது எனப் பிரதமர் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டதாகவும் அறியப்படுகிறது.

''மாவட்ட சபைகள் நிறுவப்பட வேண்டுமென்பது தேசிய அரசாங்கத்தின் கொள்கை. இது கடந்த சிம்மாசனப் பிரசங்கங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே தனது கொள்கையை நிறைவேற்ற அரசாங்கம் பின் நிற்காது. பயமுறுத்தல்களுக்குப் பணியவும் மாட்டாது. எனவே வெளியேறும் பூச்சாண்டிக்கு நான் பயப்படமாட்டேன்'' இந்தச் சாரப்பட தமிழ் காங்கிரஸ் எம். பீக்களிடம் பிரதமர் கூறிவிட்டாராம்.

எனவே தங்கள் பயமுறுத்தல் பலிக்காததைக் கண்ட தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் மாவட்டசபை மசோதாமீது தம் இஷ்டம்போல வாக்களிப்பதற்கு அங்கத்தவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டனரென்றும், அதையும் பிரதமர் நிராகரித்து விட்டதாகவும் அறியப்படுகிறது.

இதன் பின்னர் தான் மாவட்டசபைமசோதாவை எதிர்க்காமலும், ஆதரிக்காமலும் நடு நிலை வகிப்பதென்ற முடிவுக்குத் தமிழ் காங்கிரஸ் வந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

எனினும் மாவட்டசபை மசோதாவை ஆதரித்து வாக்களிக்க வேண்டிய நிலை இறுதியில் தமிழ் காங்கிரசுக்கு ஏற்படுமென்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

## திருமலையில் சிங்களத் திணிப்பு!

திருமலை புகையிரத நிலயத்தில் சிங்களத் திணிப்பு மும்முரமாக நடைபெற்று வருகிறது. திருமலை புகையிரத நிலயத்தில் கொழும்புசெல்வதற்கு வழங்கப்படும் 3வது வகுப்பு அனுமதிச் சீட்டில் சிங்களம மட்டுமேஇடம்பெற்றிருக்கிறது. ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளுமே அனுமதிச் சீட்டில் காணப்படவில்லை. இதனால் சிங்களம் தெரியாத மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

திருமலை எம். பி. மாணிக்கராசா இது விஷயமாக என்ன நடவடிக்கைஎடுக்கப்போகின்றார் என்பதையறிய அவர்கள் ஆவலாக இருக்கிறார்கள்.

## தி. மு. க. வின் புதிய பொதுச் செயலாளராக அன்பழகன் தெரிவு செய்யப்படுவார்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய பொதுச் செயலாளராக பேராசிரியர் க.அன்பழகன் தெரிவு செய்யப்படக்கூடும். தற்போதைய தி. மு. க. தலைமையும், அறிஞர் அண்ணாவும், பொதுச்செயலாளர் பதவிக்கு பேராசிரியர் அன்பழகன் தெரிவு செய்யப்படுவதை ஆதரிக்கின்றனர் என்றுதெரிகிறது.

மே 4லிருந்து தொடங்கிய தி. மு. க. ஸ்தாபன தேர்தல்கள் ஒவ்வொரு கட்டமாக நடந்து ஜுலை 21ந் திகதி பொதுச் செயலாளர் தேர்தலுடன் முடிவடையும்.

தி. மு. க. பதவிக்கு வந்தபின் நடக்கும் முதல் ஸ்தாபனத் தேர்தல் இதுதான். முந்தின தேர்தல் 8வருடங்களுக்கு முன்பு நடந்தது. 1949ல் கட்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அறிஞர் அண்ணாவே பொதுச் செயலாளராக இருந்து வருகிறார். நடுவில் ஒரு சமயம் திரு. நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராயிருந்தார். சென்ற தேர்தலில் அறிஞர் அண்ணா மீண்டும் பொதுச்செயலாளரானார்.

பொதுச் செயலாளரை பொதுக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தத் தேர்தல்களை அரசியல் வட்டாரங்கள் ஆவலுடன் கவனித்து வருகின்றன.

புதிய எக்ஸ்ரே கருவி

## வவுனியாவுக்கா? களுத்துறைக்கா?

### சுகாதார அமைச்சில் சதி!

வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் அமைப்பதற்கெனத் தருவிக்கப்பட்ட புதிய எக்ஸ்ரே கருவியை வவுனியாவுக்குச் செல்லவிடாதுகளுத்துறைக்குக் கொண்டு செல்ல சுகாதார திணைக்களத்தில் சதி முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

வவுனியா ஆஸ்பத்திரியில் ஓர் எக்ஸ்ரே கருவி நிறுவப்பட வேண்டுமென்ற நீண்ட நாளைய கோரிக்கையினையொட்டி, அண்மையில் புதிய எக்ஸ்ரே கருவி ஒன்று வரவழைக்கப்பட்டதென்றும், வவுனியாவை விட களுத்துறையில் சனத்தொகை அதிகமுள்ளதால். புதிய கருவியைக் களுத்துறைக்கு அனுப்பிவிட்டு, களுத்துறையிலுள்ள பழைய கருவியொன்றை வவுனியாவுக்கு அனுப்பவும் சதி முயற்சிகள் நடைபெற்று வருகிறதாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்!

திருவாளர் குயுக்தி !!!

வே. பேரின்பநாதன்,
நாரகேன்பிட்டி.

கே: சீராட்டிப் பெற்று வளர்த்த பெற்றோரின் பாசத்தையும், உடன் பிறந்தோரின் சகோதர பாசத்தையும் மறந்து 'காதல் போயின் சாதல்' எனக் கூறும் வாலிபர்களைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: பெற்றோர்களையும், சகோதரர்களையும் உருவாக்குவதற்கு அடிப்படையே காதல்தான் என்பதை புரிந்து கொண்டவர்கள் அவர்கள்!

ஃ

வே. குணாளன்,
கைதடி.

கே: தமிழ் மக்களுக்கு அடையாள அட்டைதேவைதானா?

ப: தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் சேர்த்துத்தான் அடையாள அட்டை வழங்கப்பட விருக்கிறது.

ஃ

கே. கே. ராஜா,
திருகோணமலை.

கே: காதலிலே தோல்வியுற்ற ஒருவன் காதலையே வெறுக்கின்ற ஒருவனைக்கண்டால் முதலில் அவனிடம் எதைப்பற்றிக்கேட்பான்?

ப: காதலைப்பற்றி!

ஃ

வே. நடராசா,
சுழிபுரம்.

கே: தனிப்பெருந் தலைவரின் வட்ட மேசை மகாநாடு என்னவாயிற்று?

ப: சதுர மேசையாகிவிட்டது!

ஃ

சாரதா-பஞ்சாட்சரம்,
மண்டைதீவு.

கே: எமது தாய்த் திருநாட்டில் தமிழ் பத்திரிகைகள் அதிகம் சிறப்படையவில்லை என நான் கூறுகிறேன். இதனைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஏன் சிறப்படையவில்லை? பெண்களின் நிர்வாணப்படங்களையும் 'செக்ஸ்' சம்பந்தமான செய்திகள், கட்டுரைகள் வெளியிடுவதிலும் 'சிறப்பு' அடைந்திருக்கின்றனவே.

ஃ

காந்த்,
மண்டைத்தீவு

கே: உங்கள் மகன் உணவு மந்திரியானால்......

ப: முதலில் வாராவாரம் பிச்சையரிசி போடுவதை நிறுத்தும்படி ஆலோசனை கூறுவேன்!

ஃ

கே. ராமஜெயம்,
பட்டியகம பஜார்

கே: அறிஞர் அண்ணாவை பற்றி சில வரிகள்?

ப: பெரியாரின் சீடராகி, தி. மு. க. தலைவராகி தமிழக முதலமைச்சராகி அகில இந்தியத் தலைவராகி, இப்போது உலகத் தலைவர்களில் ஒருவராகிவிட்டார் பேரறிஞர் அண்ணா. போதுமா?

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை

கே: மரத்துக்கு மரம் தாவும் குரங்கும் கட்சிக்கு கட்சி தாவும் ஆறறிவு படைத்த மனிதனும் ஒரே இனந்தானே?

ப: மரத்துக்கு மரம் குரங்கு தாவுவது அதன் இயல்பான சேட்டை. அதில் சுயநலம் கிடையாது. ஆனால் மனிதன் கட்சிவிட்டு கட்சி மாறுவது சுயநலத்துக்காக. எனவே அப்படிப்பட்டவர்களை குரங்குகளுடன் கூட ஒப்பிட முடியாது!

ஃ

ஆர். ஆனந்தசுப்பிரமணியம்
நீர்கொழும்பு

கே: உலகம் எப்போது சொர்க்கமாகும்?

ப: மனிதன் தேவனாகும் போது!

கே: மனிதர்கள் உருவத்தில் கடவுள் இருக்கிறாரா?

ப: பொறாமைசூது, பொய் வஞ்சகமற்ற வெள்ளை உள்ளங்கொண்ட மனிதர்கள் எல்லாம் கடவுளர்கள் தானே!

ஃ

த. திலகராசா,
யாழ்ப்பாணம்

கே: இவ்வளவு காலமாக சிரித்துக் கொண்டு இருந்த நீர் ஏன் சென்றவாரம் (26-4-68) ஒளித்துவிட்டீர்?

ப: இப்படியொரு கேள்வியை நீங்கள் கேட்க வேண்டுமென்பதற்காக!

ஃ

வியாபாரிமூலை ஸ்ரீ,
பருத்தித்துறை

கே: தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாக வவுனியா எம். பி. பேசுவது எவ்வளவு தூரம் உண்மை?

ப: அது அவரது சொந்த கருத்து என்று கூறிவிட்டாரே உடுப்பிட்டி எம். பி.

ஃ

எஸ். சுந்தர்ராஜ்,
லக்ஸபான

கே: இந்தியாவில் கருத்தடை மாத்திரைகள் ஐந்து காசுக்காக விற்பனை செய்வது போல் இந்நாட்டிலும் சாதாரணமாக விற்பனை செய்தால் என்ன?

ப: ஆபத்தான யோசனை: இங்கு இப்பொழுதே ஒழுக்கக்கேடுகள் அதிகரித்துவிட்டன. இந்நிலையில் கர்ப்பத்தடை மாத்திரைகளும் சாதாரணமாகக் கிடைத்தால்...?

ஃ

? ? ?
வல்வெட்டிதுறை

கே: வீட்டில் ஒரு காதலியை வைத்துக்கொண்டு சினிமாத்தியேட்டரில் இன்னொரு காதலியைப் பார்ப்பவனை யாருடன்ஒப்பிடலாம்?

ப: கம கம என்று தாளித்து மணக்கும் வீட்டு உணவை யொதுக்கிவிட்டு ஓட்டலில் வந்து காய்ந்து போன ரொட்டியைக் கடிப்பவனுடன்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு-12

# நிறை

எமது சிறுகதை

தையிட்டி அ. இராசதுரை

ஐயரின் கூப்பன் கடையில் வாங்கி வந்த சீனியை வழமையாகப் போட்டு வைக்கும் ஒரு இருத்தல் சீனி கொள்ளக் கூடிய சீனிப்போத்தலிற்குள் போட்டு நன்றாகவழியவழிய சீனிப்போத்தலை நிரப்பி இன்னும் அதே தணிசான போத்தலிற்குள்...... அரைவாசிக்குக் கொள்ளக்கூடிய அளவான சீனி கடதாசிச் சரையில் மிஞ்சியிருப்பதை 'இதென்னடா புதின மாய்க் கிடக்கு' தென்று ஆச்சரியப்பட்ட படி கடதாசிச் சரையைப் பார்த்துக் கொண்ட வாசுகி அம்மாள் முதல் வேலையாக சீனிவாங்கப் போன போது கடையில் வாங்கி — சேலைத் தலைப்பில் பக்குவமாக முடிந்து வைத்திருந்த மீதிச் சில்லறையை அவிழ்த்தெடுத்து எவ்வளவென்று எண்ணிப்பார்க்கின்றாள்......

'இதென்னடா பெரிய புதினமாய்க் கிடக்குது... இதிலை... ஒரு றுத்தல் சீனிக்குத் தான்...நான் குடுத்த இரண்டு ரூபாய்த் தாளிலும் எழுவத்தைஞ்சு சதம்போக ...மிச்சமாய் ... ஒண்டகால் ரூபாய் கிடக்குது... இதிலை இங்கை... ஒண்டரை இருத்தல் சீனிக்குக் கூடக்கிடக்கு மாப் போலை கிடக்குது... நான்...ஒரு றுத்தல் சீனியெண்டது சீனியருக்கு ஒண்டரை றுத்தல் சீனியெண்டு கேட்டுதோ......? அப்பிடியெண்டாலும் ஒரு றுத்தல் சீனிக்குத்தானே காசெடுத்துக்கிடக்குது...?? நான் வழமையாக எப்பவும் ஒவ்வொரு இருத்தல் சீனியாய்த்தான் வாங்கிறது. ஏன் சீனியருக்கு நல்ல வடிவாய்த் தெரியும்...ஏனம்மா ...உங்களுக்கு மாதத்திலை பெருவாரி சீனி சமையிது தானே...ஒவ்வொரு றுத்தல் சீனிக்குமினைக்கட்டு கொண் அடிக்கடி கடைக்கி நடக்கிற நேரம் ஒரேயடியாய் ஒரெட்டுப்பத்துறுத்தலாய் சீனியை எடுத்து வைச்சிட்டால் எல்லாத்துக்கும் சுகமெண்டு சீனியர் ஒருமுறைக்குப் பல முறை என்னட்டை இப்பிடிக்கேட்ட போது...

ஒரேயடியாய் எட்டுப்பத்து றுத்தல் சீனி வாங்கிப் போட்டு வைக்கக்கூடிய அதுக்குத்தோதான இயத்தும் என்னட்டையில்லை... இனி சீனியைக் கண்டபாட்டுக்கு கனக்கவாய் வாங்கி வைச்சாலும்...எறும்புகளும் விளையாடிப்போடும் ... இது கைமிலை காசு தந்து வாங்கிற முறையிலை...எல்லாத்துக்கும் சுகம் சீனியரெண்டும் நான் சொல்லியிருக்கிறன்...எப்பவும் சரி நூல் பிடிச்சு நிறுக்கிற மனிசன்... ஒரு அரைக்காறுத்தலல்ல... அதுவும்...அரைறுத்தலோ.. முக்காறுத்தலோ கூட நிறுத்'

வாசுகி அம்மாளின் கண்கள் தற்செயலாக சீனிக்கடதாசியில் பார்க்கவேண்டி வந்த ஒரு தலைப்புச் செய்தியைக் கூர் குறிப்பாகப் பார்க்கத்தொடங்கிவிடுகின்றன...'சீனிவாங்கக் கடைக்குப்போன பெண்ணோடு கடை முதலாளி தகாத முறையில் நடந்தார்' என்ற தலைப்புச் செய்தியை வாசுகி அம்மாள் வாசித்துக் கொண்டதும்... சீனிவாங்கப் போனடத்தில் சீனியர் தன்னோடும்த காத முறையில் நடந்து முடிந்து விட்டதைப்போன்று எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி ஓடி வரும் வேகத்தில் கிடுகிடுவென்று நடுங்கும் தண்டவாளமாக வாசுகி அம்மாளின் மனம் நடுங்கி விடுகிறது.

[illegible]

விட்டுவைச்சுது... எண்டாலும்... கடைக்காறச் சீனியரை அப்பிடிக் கடைசி வரைக்கும் கரவாக...எந்தக் குழந்தைப்பிள்ளையும் நினைக்காது...அதுகும் நாமொரு பிராமணத்தி...சீனியரொரு வெள்ளாளன் ... சீனியர் உண்மையிலை..அப்பிடியான ஒராளாய்த் தானிருந்தாலும் என்னைத் தொட முடியுமே...எவையும் ... எந்தப் பெண்டுகளும் சீனியரை நல்ல வடிவாக நம்பி சீனியரோடை கூடி ஒரு இராவழி தனிவழி துணிஞ்சு போகலாமென்று தனது மன ஐமிச்சமென்ற பேயை ஓட ஓட அடித்து விரட்டியபடி தனது மனத்தைத் தெளிவாக்கிக் கொண்ட வாசுகி அம்மாள்...

'பாவம் சீனியர்...அதுக்குப்பல பலாதி...ஆடுமாடு.. தோட்டந் துரவு......இனி அதோடை கூப்பன் கடை வியாபாரமும்... ஏதோ பல பலாதியிலையுந்தான் ஆள் நிறையிலை பிழை விட்டு விட்டுது...அதுகுமிந்தக் கட்டுப்பாட்டு விலையிலை சீனியை வாங்கி வந்து... அதிலை ஒரு சதம் அரைச்சதம் லாபம் வைச்சு விக்க முடியாத முறையிலை சீனி வியாபாரம் செய்யேக்கை... பேந்து சீனி வியாபாரத்தை எறும்பு கொண்டு போன கணக்காக ... வாறவை போறவைக்கெல்லாம் பல பலாதியோடையும் நிண்டு அரை றுத்தலை யெண்டு கூட நிறுத்துக் கொட்டி விட்டா பின்னை நாங்களும் வாச்சிது புதையலெண்டு நல்லாய் நினைச்சுக் கொண்டு ஒரு முப்பத்தைஞ்சு நாப்பது சதத்திலை லாபமெடுப்பேனு... அங்காலை...ஒரு நேரத்திலை எங்களுக்கு அதுக்கு வட்டிக்குக் குட்டியாக ... நினைக்க முழிக்க முப்பத்தைஞ்சு நாற்பது ரூபா நட்டம் வரும்... அதை அப்பிடியே கடையிலை கொண்டு போய் குடுத்து சரியாய் நிறுப்பிக்கிறதுதான் நாங்கள் கடவுளுக்குச் செய்யிற பெரிய கைமா'றென்று நேர்மை வழியில் நடந்தபடி...போத்தலிற்குள் கொட்டிய சீனியையும் திரும்பவும் கடதாசிச் சரையில் வடிவாகத் தட்டிக்கொட்டி விட்டு ஒரு சீனியும் அவம் போகாதபடி கடதாசிச் சரையைப் பக்குவமாக மடித்துச் சாக்கு நூலினால் கட்டிச் சீனிச் சரையை ஒரு ஒதுக்கில் வைத்துவிட்டு தேநீர்போடுவதற்காக அடுப்பில் கேத்தலில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரில் தேநீர் தயாரித்து விட்டு பற்றுப் பணியமாகக் கிடந்த சர்க்கரையை வழித்துத் துடைத்தெடுத்து அதை ஒருமாதிரியாகச் சரிக்கட்டி பிள்ளைகளுக்குத் தேநீரோடு குடிப்பதற்கு கொடுத்து விட்டு கோவில் பூசை முடித்து விட்டுத் தேத்தண்ணீ என்று வழமைபோல் கேட்டபடி வரப்போகும் கணவனுக்கென்றும் தேநீரோடு குடிப்பதற்காக... பிள்ளைகளுக்குக் கொடுத்து எஞ்சிய சர்க்கரையை ஒரு கடதாசித்துண்டில் கவனமாக வைத்துவிட்டு தான் பஞ்சம் பசி... துன்பம் எல்லாவற்றையும் பல்லையிறுக்கிக் கடித்துக் கொண்டே தாங்கக் கூடியவளாக சர்க்கரையற்ற வெறும் தேநீரைப் பருகத் தொடங்கிவிடுகிறாள்.

கோப்பி தேநீருக்குள் ஒரெப்பன் சீனி குறைந்தாலே சீனி காணாது...காணாதெண்டு வீடுக்கெல்லாம் புடுங்கியெடுக்கும் தனது கணவர்...இன்றைக்கு சீனி போடாத தேநீரைச் சக்கரையோடு குடிப்பதற்கு என்ன திருவிழா நடத்துகிறாரோ...உள்ளதைச் சொன்னாலும்...தொட்டது தொட்டதுக் கெல்லாம் சும்மா ஐமிச்சப்பட்டு முடிக்கும் சூரனான தனது கணவர் என்னத்தையெல்லாம் வித்தியாசமாக விளங்கா வழக்கமாக நினைத்து முடித்துவிடுகிறாரோ என்றெல்லாம் யோசித்தபடியே கோப்பையோடு தேநீரை நுனிச் சொண்டில் வைத்து மெல்ல மெல்ல உறிஞ்சிக் கொண்டிருந்த வாசுகி அம்மாள்...

பூசை முடித்துக் கொண்டு ஐயர் வீட்டிற்குள் வந்து நிமிர்ந்ததும்... குடித்துக் கொண்டிருந்த தேநீரையும் அப்படியே வைத்து விட்டு கோப்பையோடு தேநீரையும் கடதாசியோடு சர்க்கரையையும்கொண்டு போய் ஐயரிடம் நீட்டுகின்றாள்.

'...இதென்னப்பா... எங்களுக்கும் காலம் மாறிப் போச்சுதே... இதென்ன...?

'இண்டைக்குப்பாட்டுக்கு உதோடை குடியுங்கோ...சீ'

'எதோடை குடிக்கிறது... இந்தக் கோதம்பமாக் கலந்த சக்கரையோடை தண்ணியைக் குடிக்கிற நேரம் தண்ணி விடாயைத் தாங்கிக் கொண்டிருந்து போட்டுப் போறது...

'நான் கடைக்குப் போட்டுத்தான் வாறன் ... சீனியரென்னும் யூனியனாலை வரேலையாம்'

'அவன் யூனியனாலை வாற வரிசம் வரட்டுக்கும் ... இஞ்சைவிடு' என்று விசைத்தபடி...சீனிப் போத்தலிற்குள் ஒட்டிக்கிடக்கும் சீனிகளையாவது போத்தலோடு கையில் தட்டிக் கொட்டி அதோடாவது நக்கிநக்கியாவது தேநீரை ஒரு மாதிரியாகக் குடித்து முடிப்போமென்ற எண்ணத்தோடு தேநீர் கோப்பையோடு குசினிக்குள் போன ஐயர்... 'இஞ்சைவா ... இஞ்சை ஓடிவா' வென்று குசினிக்குள் ஒரு கள்வனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டவராகக் கூப்பிடத் தொடங்கியதும் வாசுகி அம்மாள் ... ஐயரின் காலடியில்ஓடிப்போய் நின்று விடுகின்றாள்.

'சுவாமிக்குப் பூப்போடுற ஒரு ஐயற்ரை பெண்சாதி இப்பிடிப் பொய் பேசினால்... அடுத்தவையள் ... பொய் பேசுறதும்... சுத்துமாத்துப் பண்ணுறதும் ஒரு பெரிய காரியமே.. உனக்கேனிந்தச் சுத்துமாத்து...?'

தமது மனைவி தம்முடைய கழுத்தையே அறுத்து விட்டது போன்ற கடும் ஆவேசத்தில்... ஐயருடையபெரிய குடுமி அவரையுமறியாமலே அவழ்ந்து குலைந்து விடுகின்றது.

வாசுகியம்மாள் நடந்த கதையை ஐயரிடம்சொல்லி விட்டு 'நான் வேறை ஒண்டுக்குமாகவல்ல... நீங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# பாசிச சட்டத்தை உடன் வாபஸ் பெறுக!

'மாமியாருடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலம்' என்று தமிழில் ஓர் பழமொழி கூறப்படுவதுண்டு. தேசிய அரசாங்கம் இன்று எடுத்துள்ள ஓர் நடவடிக்கை இந்தப் பழமொழியைத்தான் ஞாபக மூட்டுகிறது.

''ஐயையோ, சனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது, கூட்டாட்சிக் கட்சிகளைப் பதவியில் அமர வைத்தால், சர்வாதிகாரம் தலை தூக்கிவிடும்; தனி மனித சுதந்திரம் தவிடுபொடியாகிவிடும்; பத்திரிகை சுதந்திரம் பழங்கதையாகிவிடும்; என்றெல்லாம் கடந்த பொதுத் தேர்தலின் போது பிரசாரம் செய்யப்பட்டது.

ஜனநாயகம் இந்நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டும்; தனி மனித சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஒரேயொரு இலட்சியத்துக்காக தென்னிலங்கையில் கூட்டாட்சிக் கட்சிகளை தோற்கடிக்கச் செய்ததுடன், ஐ. தே. கட்சிக்கும் மக்கள் அமோக ஆதரவளித்தனர். அதனால் தேசிய அரசாங்கமும் தோன்ற முடிந்தது.

ஆனால் ஜனநாயகத்தைக் காப்போம்; தனி நபர் உரிமையைப் பேணுவோம் என்று வாய் கிழியப் பேசிக்கொண்டே அவற்றுக்கு ஆழக் குழி வெட்டும் அநீதியான ஓர் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது. நாட்டின் ஒரு பகுதி மக்களின் உணவுக்கும் உடைமைக்கும் கட்டுப்பாடு விதிக்க முடிவு செய்தது, தனி நபர் உரிமைகளில் கைவைக்கும் செயல் என்பதுடன் அப் பகுதி மக்களைப் பயங்கர படுகுழியில் தள்ளுவதுமாகும்.

நாம் இங்கு குறிப்பிடுவது எதைப்பற்றி யென்பதை இனியும் தொட்டுக்காட்ட வேண்டியதில்லை —வட பகுதியில் சில பகுதிகளில் குறிப்பிட்ட சில பொருட்களுக்கு கட்டுப்பாடு விதிக்க அரசாங்கம் செய்துள்ள முடிவையே குறிப்பிடுகிறோம். இந்த முடிவு எவ்வித ஆலோசனையுமின்றி—இதனால் மக்கள் அடையக்கூடிய தொல்லைகளையும், கஷ்டங்களையும் பற்றி முன் பின் சிந்திக்காது எடுக்கப்பட்ட ஒரு முடிவு என்றே நாம் கருதுகிறோம்.

அதுவும் வட பகுதியில் மட்டும் இக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளதால், இது தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் வேண்டு மென்றே கொடுமைப்படுத்தவென திட்டமிட்டு எடுத்த நடவடிக்கை என்று ஒருவர் கூறினால் அதை அசட்டை செய்துவிட முடியாது.

கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்குத்தான் இந் நடவடிக்கையென்றால், கள்ளக் கடத்தல் வடபகுதியில் மட்டும்தானா நடைபெறுகிறது. கொழும்பிலும், ஏனைய இடங்களிலும் நடைபெறவில்லையா? கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு மகாவீரர்களான நமது பொலீசாரினாலும் இராணுவ வீரர்களாலும் முடியவில்லையென்றால், அதற்கு சாதாரண பொது மக்கள் தானா பலியாக வேண்டும்?

வட பகுதி கடற்கரை யோரமாகவுள்ள முல்லைத்தீவு சுண்டிக்குளப் பகுதியிலிருந்து காரைநகர் கோவளம் வரையுள்ள மக்கள், தம் தேவைக்கு ஏற்றபடி உணவுப்பொருட்களையும் உடைமைகளையும் தேடிவைத்துக்கொள்ளக்கூடாது என்று கூறி அதற்கு வரையறை விதித்து அவர்களின் உரிமைகளில் கைவைப்பது எந்த ஜனநாயகக் கோட்பாடு என்பது நமக்கு விளங்கவில்லை.

தங்கப்பாளங்களும், வெள்ளிப்பாளங்களும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடை செய்வதில் தப்பில்லை. ஆனால் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய, பால்மா, மிளகாய், மிளகு, பாக்கு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாடு விதித்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாதென்று சட்டம் போடுவது அநீதியானது; அக்கிரமமானது; அடுக்காதது.

இதில் மிகப் பெரிய ஆபத்து, கேட்டுக் கேள்வியின்றி அப்பகுதியிலுள்ள வீடுகளில் புகுந்து சோதனையிடுதற்கு இராணுவத்துக்கும் பொலீசுக்கும் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதுதான். இது குரங்கின் கையில் பூமாலையைக் கொடுப்பதை போன்றதாகும். அராஜகத்திற்கு வழிவகுக்கும்.

சாதாரண நேரத்திலேயே இராணுவத்தினர் வடபகுதியில் கிராமங்கள் தோறும் நடத்தும் ஆர்ப்பாட்டங்களும், செய்யும் அட்டூழியங்களும் சொல்லுந்தரமன்று; வல்வெட்டித்துறைப்பகுதியில் இராவணுக் கெடுபிடியால் மக்கள் காற்று வாங்க கூட வெளியில் நடமாட அச்சப்படும் நிலை இருந்து வருகிறது.

இந்நிலையில், இராணுவத்திடம் வீடுகளில் புகுந்து சோதனையிடும் அதிகாரத்தையும் வேறு கொடுத்தால், அப்பகுதியில் பெண்கள் மானத்தைக்காப்பாற்றி வாழ முடியாது போவதுடன் மக்களின் அன்றாட வாழ்க்கை நிம்மதியாக நடக்கவும் முடியாது.

அது மட்டுமன்றி இச்சட்டம், தமிழ் மக்களை கொடுங்கோலாட்சிக்குள் தள்ளும் ஒரு பாசிச நடவடிக்கையாகும். தமிழ் மக்களுக்கு முன்னைய ஆட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள காயங்களை ஆற்ற முனைவதாகக் கூறிக்கொண்டே புதிய காயங்களை ஏற்படுத்த தேசிய அரசாங்கம் முனைவதை இறுக்கமாகக் கண்டிக்கிறோம்.

இப்படியொரு சட்டத்தைப் போடுவதற்கு முன்பு இதனால் பாதிக்கப்படவிருக்கும் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு ஏன் அவர்களின் அபிப்பிராயங்கள் கேட்டறியப்படவில்லை? அவசரக்காலச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சர் சர்வாதிகாரியாக மாறலாமா? மக்கள் பிரதிநிதிகளின் கருத்தறிந்த பின்னரல்லவா நிதியமைச்சர் நடவடிக்கையெடுத்திருக்க வேண்டும்?

தமிழ்மக்களின் உரிமைகளைக் காப்பாற்றுவதாக பலமுறை உறுதியளித்துள்ள சனநாயக உள்ளங் கொண்ட பிரதமர் இந்த அநீதியான சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற நடவடிக்கையெடுப்பாரென நம்புகிறோம்.

# புதிய இறக்குமதிக் கொள்கை மக்கள் கஷ்டத்தை தீர்க்குமா?

## பொருட்கள் கிடைக்குமா? 'கியூ' வரிசைகள் நீங்குமா?

இறக்குமதிக் கொள்கையில் தேசிய அரசாங்கம் பல மாற்றங்களை செய்துள்ளது. இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் புதிய திட்டத்தின் படி பெருமளவில் தளர்த்தப்பட்டுள்ளன. அத்துடன் அந்நியச்செலாவணி மோசடிகளைத் தடுக்கவும் புதிய திட்டம் உதவும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

நாட்டு மக்கள் பொருட் தட்டுப்பாட்டால் படும் கஷ்டங்களையும் தொல்லைகளையும் உணர்ந்து காலங் கடந்தாவது இந்த முடிவுக்கு வந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம். புதிய இறக்குமதிக் கொள்கையால், மக்கள் தங்கு தடையின்றி தமக்கு தேவையான பொருட்கள் கிடைக்குமா என்று இன்று ஆவலுடன் ஒருவரையொருவர் கேட்டுக்கொள்கிறார்கள்.

நாட்டுமக்கள் இன்று அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப் பாட்டால், அரசாங்கத்தின் மேல் வெறுப்படைந்திருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. தட்டுப்பாடு ஒரு பக்கம் என்றால், மறுபக்கம் ஒரு பொருளை வாங்குவதற்கு அதிகாலையிலிருந்து மாலைவரை கடைகளின் முன்னே அணிவகுத்து நிற்க வேண்டிய நிலைமை; அப்படி அணிவகுத்து நின்றும், குறித்த பொருள் கிடைக்கவில்லையென்று கண்டால், ஒருவனது மனநிலை எப்படி இருக்கும் என்பதை வர்ணிக்கவேண்டியதில்லை. இந்தநிலையில் ஆட்சியிலிருப்போர் மீது வெறுப்பேற்படுவதில் ஆச்சரியமில்லை.

### இடைத் தேர்தல்களின் முடிவு

நடந்து முடிந்த பல இடைத் தேர்தல்களின் போதும், மக்களின் மனக் குறையை புரிந்து கொண்டு அதை அரசாங்கத்திற்கெதிராக எதிர்க் கட்சியினர் திருப்பி விட்டதனாலேயே அரசாங்கம் தோல்வியடைய நேரிட்டதென்பதையும் இவ்விடம் குறிப்பிட்டாக வேண்டும்.

புதிய திட்டத்தின்படி 300 வகையான பொருட்கள் இறக்குமதிசெய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. குறிக்கப்பட்ட 300 வகையான பொருட்களுள் சில அவசியமற்றவை யென்று சிலர் வாதிட்டாலும், பெரும்பாலானவை அத்தியாவசியப் பொருட்களே.

### ஏமாற்றம்

ஆனால், புதிய திட்டத்தின் கீழ் மோட்டார் கார், சில்க் புடவை போன்ற ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதியாகும் என்று எண்ணியிருந்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். சிக்கனமே மூச்சாகக் கொண்டுள்ள அரசாங்கம் அதற்கு துளியும் இடமளிக்கமறுத்துவிட்டது.

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி தாராளமாக நடைபெறுமென்றும், அதனால் நாட்டின் கியூவரிசைகள் பெருமளவில் குறையுமென்றும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

பிரதமரது உறுதிமொழி வெறும் உறுதிமொழியாக மட்டும் இருந்துவிடக் கூடாது. அது செயற்பட வேண்டும். பால் மாவுக்கும், மற்றும் பொருட்களுக்கும், கடை கடையாக மக்கள் அலைந்து கொண்டிருக்க வேண்டிய இன்றைய நிலை மறைந்து, கியூ வரிசையில் நின்று தவம் செய்ய வேண்டிய கட்டாயமின்றி, அத்தியாவசியப் பொருட்கள் வேண்டிய நேரத்தில் தாராளமாக மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அந்த நிலை ஏற்பட்டு விட்டால் பின்னர் இந்த அரசாங்கத்தை மக்கள் வெறுப்பதற்கு வேறு காரணங்கள் எதுவும்இருக்க முடியாது. எனவே பிரதமரது உறுதிமொழி செயலாகும் நாட்கள் விரைவில் வர வேண்டும் என்று எதிர் பார்க்கிறோம்.

### ஒரு எச்சரிக்கை

அதே நேரத்தில் இறக்குமதி செய்யும் பொருட்களை வர்த்தகர்கள் தாம் விரும்பியபடி மக்களுக்கெட்டாத விலைக்கு விற்பனை செய்ய முயற்சிக்கலாம். அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டால், அரசாங்கத்தின் திட்டத்தால் சாதாரண நடுத்தர ஏழை மக்களுக்குப் பயன் ஏதும் ஏற்படாமல் போய் விடும். ஆகவே அநீதியான விலைக்குப் பொருட்கள் விற்கப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

புதிய திட்டத்தின் கீழ் கைத்தொழில்களுக்குவேண்டிய மூலப் பொருட்களையும் தாராளமாக இறக்குமதி செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நாட்டில் கைத்தொழில் அபிவிருத்தி துரித முன்னேற்றமடைவது நிச்சயம்.

# உடுப்பிட்டி எம். பியின் அறிவுரைக்கு பொன்னம்பலம் செவிசாய்ப்பாரா?

ஐக்கிய முன்னணி, வட்டமேசை-என்றதும் தமிழ் மக்களின் நினைவுக்கு வருபவர் சாட்சாத் ஜீ. ஜீ. பொன்னம்பலம். இந்த மகானுபாவர் இப்போது இவை இரண்டையுமே கைவிட்டு விட்டாரென்று தோன்றுகிறது.

அது மட்டுமல்ல. ஐக்கிய முன்னணி, ஐக்கிய முன்னணி யென்று ஆலாய்ப் பறந்தவர், இன்று-அதுவும் தமிழ் பிரதிநிதிகள் ஒற்றுமையாக நின்று கருமமாற்ற வேண்டிய ஆபத்துக்கள் சூழ்ந்த இவ்வேளையில்-தமிழ் மக்களின் ஐக்கியத்தை உடைப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டு வருகிறார். தமிழரசுக் கட்சிக்கு எதிராக பொய்ப் பிரசாரங்களிலீடுபட்டு வருவதுடன், மாவட்ட சபைக்கு எதிராகவும், வார்த்தைகளால் காறி உமிழ்ந்து வருகிறார்.

திரு. பொன்னம்பலத்தைப் பற்றி இங்கு கண்டித்து எழுதுவதற்கு உண்மையிலே நமது மனதுக்கு சங்கடமாக இருக்கிறது. ஏனெனில் ஆபத்து சூழ்ந்த இன்றைய அரசியல் நிலையில் தமிழ் பேசும் மக்கள் ஐக்கியப்பட்டு நின்றாலன்றி தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியாது.

ஆனால் இதை நாம் மட்டும் உணர்ந்து என்ன ஆவது? பொன்னம்பலமும் உணர வேண்டாமா? திரு. பொன்னம்பலம் தமிழ் மக்களின் ஐக்கியத்தை உடைத்தெறியக் கூடிய முறையில் நடந்து கொள்வதைப் பார்த்து நம்மால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

திரு. பொன்னம்பலம் தமிழ் பேசும் மக்களுக்கு இதுவரை பல துரோகங்களை ஆற்றியிருந்தாலும், இனியாவது-தமது வயோதிப காலத்திலாவது-துரோகியாக மாட்டார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் துரோகிகளை எப்பொழுதுமே திருத்த முடியாது என்பதுதான் நாம் பெற்ற பாடம்.

### தடுக்க முடியாது

மாவட்ட சபை மசோதாவை எதிர்த்து இன வெறியைத் தூண்டி விடுகின்றன தென்னிலங்கையில் கூட்டாட்சிக் கட்சிகள். ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு அனுசரணையாக திரு. பொன்னம்பலமும் மா. சபைகளை எதிர்க்கப்போவதாக அறிவித்திருக்கிறார். எதிர்த்து விட்டுப் போகட்டும்.

திரு. பொன்னம்பலத்தின் எதிர்ப்பும் சரி, கூட்டாட்சிக் கட்சிகளின் எதிர்ப்பும் சரி, இந் நாட்டில் மாவட்ட சபைகள் வருவதை இனி தடுத்து நிறுத்திவிட முடியாது. வெற்றிபெற முடி

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையில் இராணுவவீரர்கள் கெடுபிடி!

## தலைமைத் தளபதியிடம் திரு. துரைரத்தினம் எம். பி. புகார்!!

வல்வெட்டித்துறையில் நடைபெறும் இராணுவத்தினரின் அட்டகாசச் செயல் குறித்து பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அட்டிய கலையிடம் புகார் செய்துள்ளார். வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் பொதுமக்கள் நிம்மதியாக நடமாட முடியவில்லையெனவும், இராணுவத்தினரின் துஷ்டத் தனங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேஜர் ஜெனரலிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த சில மாதங்களாகவல்வெட்டித்துறைப் பகுதியில் 'ஒழுக்கமாக' நடந்து கொண்ட ராணுவ வீரர்கள் இப்பொழுது மீண்டும் பொதுமக்களைத் துன்புறுத்துவதிலும், தொல்லை கொடுப்பதிலும் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதிகளில் மாலை நேரங்களில் பயமின்றிக் காற்றுடக் கூடச் செல்வதற்குக் முடியாத நிலையில் வல்வெட்டித்துறைப் பொது மக்கள் கஷ்டப்படுத்தப் படுகின்றனர்சிலவாரங்களுக்குமுன்னர், திரு. துரைரத்தினம் பா. உ. கூட, இராணுவ வீரர்கள் சிலரின் கெடுபிடிக்கு ஆளாக நேர்ந்துள்ளதாகத் தெரிய வருகிறதுதிரு.துரைரத்தினம் இவ் வாரம் இதுவிடயமாகப் பிரதமரைச் சந்தித்துப் பொது மக்களின் கஷ்டங்களையும், இராணுவத்தின் வரம்பு மீறிய நடவடிக்கைகளையும் எடுத்துச் சொல்லவிருக்கிறார்.

# "தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தும் தனித்தன்மையை இழக்காதது தமிழரசுக்கட்சி யொன்றுதான்"

## "ஒப்சேவர்" வழங்கும் சான்றிதழ்

### சொன்னதும் சொல்ல மறந்ததும்

தமிழரசுக் கட்சியினர் பதவியாசை பிடித்து தடுமாறுகிறார்கள்.

-வி. நவரத்தினம்.

—எனக்கு மட்டும் அது இல்லையென்று எண்ணுதீர்! எம். பி. பதவியை மட்டும் நான் விடமாட்டேன்.

அடுத்த மேதினத்தைக் கொண்டாடும் போது நாம் அரசாங்கக் கட்சியாக இருப்போம்.

-என். எம். பெரேரா.

—ஆனால் தொழிலாளர்களின் 21 கோரிக்கைகளை மட்டும் குப்பைக் கூடைக்குள் கசக்கிப் போட்டு விடுவோம்.

மாவட்ட சபைகளினால் ஏற்படும் விளைவுகளுக்குப் பிரதமரே பொறுப்பு.

-சிறிமாவோ.

—ஆனால் மாவட்ட சபை மசோதாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு அப்பாவிச் சிங்கள மக்களைத் தூண்டி இன வெறியைக் கிளப்பி விடுவது மட்டும் எங்கள் பொறுப்பு.

இந்நாட்டின் சிறுபான்மையினர் அரசியல் பொருளாதாரத் துறைகளில் சிங்கள பௌத்தர்களைவிட மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள்!

-அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் எச். டபிள்யூ. அமரசூரியா.

—ஆகவே அதை நீக்குவதற்குப் பொறாமையையும், அசூயையும் நீக்கப் பாடுபட்ட புத்த பிரானின் போதனைகளைக் கொஞ்சக் காலம் ஒதுக்கி வைத்து விடுங்கள்!

மாவட்டசபை வெறும் புலுடா.

-ஜீ. ஜீ.

—கடந்த 30 வருடமாக அரசியலில் பெரும் புலுடாக்களை அடித்து வரும் என்னிடம் புலுடா அடிக்க முடியுமா?

"தேசிய அரசாங்கத்தில் இணைந்துள்ள அரசியற் கட்சிகளின் சுயேச்சையான அரசியல் தனித்துவத்தை பிரதமர் டட்லி அக்கட்சிகளினின்றும் அகற்றிவிட்டார். ஆனால் தமிழரசுக் கட்சி ஒன்று மட்டும் தான் தனது தனித்துவத்தையும் சுயேச்சையான நிலையையும், தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தபின்பும் இழக்கவில்லை.''

இவ்வாறு இம்மாதம் 4-ம திகதி சிலோன் ஒப்சேவர் ஏட்டில் அதன் அரசியல் நிருபர் எழுதியுள்ள ஓர் விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் மாவட்டசபை மிக விரைவில் அரசியல் ரீதியாக நிதர்சன உண்மையாகி விடப் போவது உறுதியென்றும், அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருமதி பண்டாரநாயகா தம்முடன் கூட்டாட்சியில் இணைந்த ஏனைய கட்சிகளின் தனித்துவங்களை அவற்றிடமிருந்து பறித்தெடுத்துவிட்டார். அதேபோல 1965-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின், திரு. டட்லி சேனநாயகா, தம்முடன் சேர்ந்த சகல அரசியற் கட்சிகளின் சுயேச்சையான அரசியல் அடையாளங்களையும் அவற்றிலிருந்து அகற்றிவிட்டார்.

ஆனால் இதற்குத் தமிழரசுக் கட்சி மட்டும் விதிவிலக்காக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் அரசாங்கத்துடன் பல விடயங்களில் அவர்கள் எதிராகப் போக நேரிட்டதே. அரசாங்கத்திலுள்ள தமிழர்களும் சிங்களவர்களும் நூற்றுக்கு நூறு வீதம் ஒத்துப் போக முடியாத பல பிரச்சினைகள் இருக்கின்றன.''

#### மாவட்ட சபை

மாவட்டசபை பற்றி அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள சில பகுதிகள் வருமாறு:-

1965-ம் ஆண்டு அரசாங்கம் அமைக்கப்பட்டது முதல் தமிழரசுக்கட்சி மாவட்ட சபைகளைக் கோரி வருகிறது. மாவட்டசபைச் சலுகையே அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியைக் கொண்டு வந்து சேர்த்தது.

மாவட்டசபை மசோதா குறித்த காலத்துள் வராவிட்டால், தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென்று கட்சியிலுள்ள தீவிர வாதிகள் நெருக்கினர். திரு. செல்வநாயகம் கூர்மையான மதி நுட்பம் வாய்ந்த தலைவர். அவர் தம்மைப் பின்பற்றும் கட்சித் தொண்டர்களையும், ஏனையோரையும் போதிய சமாதானம் கூறி, அவர்களின் அச்சங்களைப் போக்கி வந்தார். ஒவ்வொரு கட்சிக் கூட்டத்திலும் அவரது கருத்துக்களை கட்சிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் பா. உ. விளக்கி வைத்தார்.

#### ஏற்பது ஏன்?

அரசாங்கத்தை விட்டுத் தமிழரசுக்கட்சிவெளியேறப் போவதாகப் பலமுறை பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும், அவற்றை திரு. செல்வநாயகத்தினால் நிறுத்தி வைக்க முடிந்தது. எனினும் இப்பயமுறுத்தல்களை உபயோகித்து அரசாங்கத்துக்கு சிறிய அளவில் நெருக்குதலை ஏற்படுத்தவும் அவர் பின்னிற்கவில்லை.

மாவட்ட சபையின் நிர்வாகம் நேரடியாக அமைச்சர்களின் மேற்பார்வையில் இருக்குமென்று மசோதாவில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், இந்த மாவட்ட சபைகளைத் தமிழரசுத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்றால், அவர்கள் மூடர்களல்லர். மாவட்ட சபைபற்றி அவர்கள் போட்டுள்ள கணக்கு இதுதான்.

''மாவட்டசபை அமைப்புக்கள் நிறுவப்பட்டதும், பெரும்பான்மையான மாவட்ட சபைகளின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் சிங்கள மக்கள், தங்களுக்கு மேலதிக அதிகாரங்களைக் கோருவர். மத்திய அரசாங்கத்தில், அரசியல் நெருக்கடி கொண்டு வரப்படும். இப்படி நெருக்குதலைக் கொண்டுவரப்போவது தமிழரசுக் கட்சியல்ல; சக்தி வாய்ந்த பெரும்பான்மைமைச் சிங்கள வாக்காளர்களே.

மத்திய அரசாங்கம் மேலதிக அதிகாரங்களைச் சிங்களப் பகுதி மா. சபைகளுக்கு வழங்கினால் அவ்வதிகாரங்கள் தமிழ்ப் பகுதி மா.சபைகளுக்கும் கிடைக்கும். சமஷ்டிக் கட்சி தானாகத் தேடிப் பெற்றுக் கொள்ள முடியாததை சிங்கள மக்களே அத் [illegible]

# 'உங்கள் விடுதலையே எமது இலட்சியம்'

## மலையகத் தமிழர் மத்தியில் உடுவில் எம். பி. முழக்கம்!

'குடியுரிமையையும், மொழி உரிமையையும், கல்வியுரிமையையும், பொருளாதாரவளர்ச்சியையும் முன்வைத்து போராடும் எமது கழகம் விடுதலை இயக்கமாக தொடர்ந்து வளர்ந்து வருவதற்கு இம்மேதினமே எடுத்துக் காட்டாகும். இன்றுஇங்கு கூடியிருக்கும் உங்கள் மத்தியில் எவ்வளவு விடுதலை உணர்ச்சி தோன்றியுள்ளது என்பதை எமக்கு எடுத்து காட்டுகிறது. உங்கள் விடுதலை எங்கள் லட்சியமாகும்'

இவ்வாறு பொகவந்தலாவையில் நடைபெற்ற இ. தொ. கழகத்தின் மேதின கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர் திரு. வி. தர்மலிங்கம் பா/உ தலைமையுரையின் போது கூறினார். அவர் தொடர்ந்து பேசிய போது அடக்கியாண்டவர்களை எதிர்த்து அடிமைத் தளையை அகற்றி எட்டு மணி நேர வேலை என்ற திட்டத்தை சட்டமாக கொண்டு வந்த போராட்ட நாளை இன்று அவனியெங்கும் வெற்றித் திருநாளாக கொண்டாடுகிறோம். நாம் எமது உரிமைகளையும், சலுகைகளையும் போராட்டத்தின் மூலம் மட்டுமே பெற முடியும் என்பதை நீங்கள் மறக்கக் கூடாது. எமது தேவைகளைப் பெறுவதற்கு போராடுவதற்கு நீங்கள் எப்பொழுதும் என்றும் தயாராக விருக்க வேண்டும் 'என்றார்

கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பா/உ பேசும்போது மாவட்ட சபையால் மலையக மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றி எடுத்துக் கூறினார். கழகம் கடந்த காலங்களில் செய்த சாதனைகளையும் எதிர் காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் வேலை திட்டங்களையும் விளக்கிக் கூறினார்.

கழகத்தின் தொழில் உறவுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள் பேசும் போது, இன்று இலங்கை வாழ் மலையக மக்களை இரண்டு பிரச்சினைகள் எதிர் நோக்கியுள்ளது.ஒன்றுஇலங்கை பிரஜையாவது. மற்றது இந்தியப்பிரஜையாவது. இந்த இரண்டில் ஏதாவதொன்றுக்கு தம்மை தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டியது உமது கடமையாகும். இலங்கையில் இருப்பதா அல்லது இந்தியா செல்வதா என்பதை நீங்கள் துருவி ஆராய்து முடிவு செய்ய வேண்டும்.

ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகாலமாக பரம்பரை பரம்பரையாக இந்நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபட்ட நாம் இந்நாட்டை விட்டு போகத்தான் வேண்டுமா என்ற கேள்வி எம்மத்தியில் தற்சமயம் எழுகிறது. எமக்களிக்கப்பட்ட இந்த நல்ல சந்தர்ப்பத்தை நல் வழியிலே பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு இப்பிரச்சினையில் தேவை எதுவோ அதைச் செய்ய எமது கட்சியும் கழகமும் எந்த நேரமும் தயாராக இருக்கிறது என்று கூறினார்.

மற்றும்திரு. விநாயகமூர்த்தி, உட்பட பலர் உரையாற்றினர்.

### திறை சேரியின் புதிய கட்டளை

அரசாங்கத்திணைக்களங்களிலிருந்து வெளியிடப்படும் அறிக்கைகள், படிவங்கள், வெளியீடுகள், ஆகியவற்றின் முகப்புக்களில் இடப்படும் தலைப்புக்கள், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் இடம்பெற வேண்டுமென்று சகல அமைச்சுக்களின் நிரந்தரச் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் திறைசேரி சுற்றறிக்கை யொன்றின் மூலம் அரசாங்கம் உத்தர விட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாவட்டசபை தென்னிந்தியாவிலிருந்தும் கடன் பெறமுடியுமாம்!

## வடக்கும், கிழக்கும் மலைநாடும் தமிழர் நிர்வாகத்துக்குள் வரும்"

### மாவட்டசபை மசோதா குறித்து "சன்" ஏட்டின் விமரிசனம்

"தமிழ்மக்களின் மரபு வழித் தாயகமென்று தமிழரசுக் கட்சி கூறும், யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை போன்ற பகுதிகளின் உள்ளூர் நிர்வாகம் உத்தேச மாவட்ட சபை மசோதா சட்டமானல், தமிழர்களின் நிர்வாகத்துக்குள் வந்துவிடும். கண்டிப்பகுதியிலும், இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டபடி 3இலட்சம் தமிழர்களான தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவிருப்பதனல் பதுளை, நுாரளை; மாத்தளை, கண்டி மாவட்டங்களின் நிர்வாகங்களிலும் தமிழர்களின் கை இறுக்கமாகும். சிலாபம், புத்தளம் பகுதிகளிலும் தமிழ் பேசும்மக்கள் குறிப்பிடத்தக்க அளவு வாழ்ந்து வருவதை நாம் மறந்துவிட முடியாது."

இவ்வாறு உத்தேச மாவட்ட சபை மசோதா பற்றி தினபதியை வெளியிடும் தவச நிறுவனத்தின் ஆங்கில ஏடான 'சன்'பத்திரிகையின் ஏப்ரல் 30ந் திகதி இதழில், டக்ளஸ் கிறினியர் என்பார் எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மசோதாவால் சிங்கள இனம் காலப்போக்கில் இந்நாட்டிலிருந்து பூண்டோடு அழிந்துவிடுமென்று வகுப்புவாத நஞ்சைக் கக்கியுள்ள அக்கட்டுரையில் கூறப்பட்டிருக்கும் முக்கிய பகுதிகள் வருமாறு:—

★ மாவட்ட சபைகளுக்கு விரிந்து பரந்த அடிப்படையில் அதிகாரம் வழங்கப்படவிருப்பது இப்போது தெளிவாகிவிட்டது.

★ மாவட்ட சபைகளின் நிர்வாகத்துக்கு உள்ளூராட்சி அமைச்சரே பொறுப்பாளியாக இருக்கப் போகிருர். மாதேசாதிபதி, பிரதமர் போன்ற யாருக்ம்ம் இவ்வளவு அதிகாரம் கிடையாது.

★ மாவட்ட சபைகளின் கமிஷனர்களுக்குகாலத்துக்குக் காலம் அமைச்சர் அனுப்பும் கட்டளைகளை, கமிஷனர் நிறைவேற்ற வேண்டும். உதாரணமாக திருமலைதுறைமுக நிர்வாகம் அப்பகுதி மாவட்ட சபையின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டுமென அமைச்சர் உத்தரவிட்டால், அதைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாது.

★ பொது மக்களின் நலனைக் குறித்து இன்ன இன்ன நடவடிக்கைகளையெடுக்கும்படி குறிப்பிட்ட மாவட்ட சபை ஆணையாளருக்கு கட்டளையிட அமைச்சருக்கு அதிகாரமுண்டு. எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாவட்ட சபை கட்டுப்பட்டே நடக்க வேண்டும். அதற்குமறுத்தால் அமைச்சர்குறித்த மாவட்ட சபையை கலைத்து விட்டு அதன் நிர்வாகத்தை கமிஷனரிடம் ஒப்படைக்க முடியும்.

★ சட்டப் புத்தகத்திலுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தையோ, அல்லது சட்ட விதிகளையோ, ஒரு குறிப்பிட்ட மாவட்ட சபை அமுல் நடத்தத்தேவையில்லையென்று நிறுத்திவைக்க உள்ளூராட்சி அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

★ இத்தகைய அதிகாரங்களினல் உள்ளூராட்சி அமைச்சர் காலப்போக்கில் சர்வாதிகாரியாகிவிடுவார். அவரது உத்தரவுகளை எதிர்த்து அப்பீல் செய்யக்கூட முடியாது.

★ குறிப்பிட்ட மாவட்டத்துக்குள் வர்த்தகத்தில் அல்லது வேறு தொழிலில் ஈடுபட்டிருப்போர்மீது வரிவிதிக்கும் அதிகாரம், மோட்டார் வாகனங்களுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் போன்றவை மாவட்டசபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ குறிப்பிட்ட மாவட்டத்துக்குள் அடங்கும் அரசாங்க காணிகள் அனைத்தும் மாதேசாதிபதியின் உத்தரவுடன் குறிப்பிட்ட மாவட்ட சபையின் அதிகாரத்துக்குள் வரும்.

★ மாவட்ட அபிவிருத்திக்காக கடன் வாங்கக்கூடிய அதிகாரம் மாவட்ட சபைகளுக்ப் தாராளமாக அளிக்ககுபட்டிருக்கிறது. தென் இந்திய அரசாங்கத்திடமிருந்தும் ஒரு மாவட்ட சபை கடன் வாங்க முடிவு செய்தால், அது சட்டத்திற்குட்பட்டதாகவே இருக்கும்.

'இப்படிப்பட்ட மாவட்ட சபைகளை ஏற்றுக் கொள்ளும்படி சிங்கள இனத்தை கோருவதும், அவர்களை தூக்குப் போட்டுக் கொள்ளும்படி கூறுவதும் ஒன்றுதான்' இக்குறிப்புடன் குறித்த கட்டுரை முடிகிறது.

---

## உடுப்பிட்டி எம். பியின் அறிவுரைக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத வீண் முயற்சியில் திரு. பொன்னம்பலம் இறங்கி, தமிழினத்தின் துரோகி என்ற பட்டத்தைப் புதுப்பித்துக்கொள்வதுதான் நடக்கப் போவது.

### புதிய பொய்

தமிழ் காங்கிரஸ் மேதினக் கூட்டமொன்றில் பேசிய திரு. பொன்னம்பலம் ஒரு புதிய பொய்யை மனந் துணிந்து கூறியிருக்கிருர்.

தமிழரசுக்கட்சியார் அடையாள அட்டை ஆட் பதிவு மசோதாவின் 27-வது சரத்தையும் சேர்த்து அதிலுள்ள ஆபத்தை உணராது ஏற்றுக் கொண்டனரென்றும், தான் அதை எதிர்த்த பின்னர்தான், தமிழரசாரும் எதிர்த்ததாகவும் தம்மைத் தாமே புகழ்ந்திருக்கிருர்.

அரசாங்க பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில், அடையாள அட்டை ஆட் பதிவு மசோதாவிலுள்ள 27 வது சரத்தை மட்டுமல்ல, அதிலுள்ள ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமான அம்சங்களையும் எடுத்து விளக்கி அவற்றை நீக்க வேண்டுமென முதலில் வாதாடியவர் திரு. அ. அமிர்தலிங்கம், அவர்களே. அதன் பின்னரே திரு. பொன்னம்பலம் கண் விழித்தார். இதுவே உண்மை.

இவற்றை இங்கு குறிப்பிடவேண்டி வந்ததற்காக வருத்தப்படுகிருேம். ஏனெனில் இவை யெல்லாம் அற்ப பிரச்சினைகள். இந்த அற்ப பிரச்சினைகளிலும், திரு. பொ. பொய்ப்பிரசாரம் செய்வதால் உண்மையை மக்களுக்கு கூறவேண்டியது அவசியம் ஏற்பட்டுவிட்டது.

### போதனுமொழி

போதனுமொழிப் பிரச்சினையில் போதனு மொழியைப் பெற்ருேர்கள் தெரிவு செய்ய விடுவதில் என்ன தவறு என்று திரு. பொன்னம்பலம் கேட்டதும், அதிலுள்ள ஆபத்துக்களை திரு. அமிர்தலிங்கம் தெரியப்படுத்திய பின்னர் தான் திரு. பொன்னம்பலமும் சேர்ந்து அதை எதிர்க்க ஆரம்பித்ததும், அரசாங்க பாராளுமன்றக் குழுவினர் அனைவரும் அறிந்த பகிரங்க ரகசியம்.

ஆகவே திரு. பொன்னம்பலம் வீண் குதர்க்கவாதங்கள் எழுப்புவதை விட்டு தனது சிஷ்யரான உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் சொல்லியிருப்பது போல, தமிழினத்துக்கு ஆபத்து சூழ்ந்துள்ள இவ்வேளையில், ஒற்றுமையுடன் செயலாற்ற முன்வரட்டும்.

---

## வவுனியா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வருப்புவாத அடிப்படையிலேயே இம்முயற்சிகள் நடக்கிறதென்றும் வவுனியா ஓர் தமிழ்ப் பகுதி என்ற காரணத்தால், அங்கு புதிய கருவி அனுப்பப்படுவதற்கு வகுப்புவாதிகள் [illegible] தாகவும் கூறப்படுகிறது.

---

## சுதந்திரன் சொன்னது அன்று! சிந்தாமணி செப்புகிறது இன்று!

தமிழகத்தில் கடந்த சனவரித் திங்களில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின் போது, தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப தமிழக அரசு மறுத்ததையும், அதையொட்டி முன்னும் பின்னும் நடந்த நிகழ்ச்சிகளையும், இதனல், முஸ்லிம்கள் மனம் வெதும்பியதையும் சுதந்திரன் 3 மாதங்களுக்கு முன்னரே (28-1-68 இதழில்) துணிவுடன் அம்பலமாக்கியிருப்பது வாசகர்கள் அறிந்ததே.

'சிந்தாமணி' இதழில் உலகத் தமிழ் மாநாடு பற்றி கட்டுரையெழுதிவரும் பிரமுகர், இதே விஷயங்களை தமது 4-5-68 இதழ் கட்டுரையில் கூறியுள்ளார்.

ஆனல், இந்த விவகாரங்களை இலங்கையில் இதுவரை எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லையென்று வழமை போல அவர் தற்பெருமையடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது தான் நமக்கு வேதனையொருபக்கமும், சிரிப்பு ஒரு பக்கமுமாக இருக்கிறது.

ஐயோ பாவம், குறித்த பிரமுகர் சுதந்திரன் இதழைப் பார்த்திருக்க மாட்டாரோ என்னவோ? ஆனல் சுதந்திரன் வாசகர்கள் அவரது தற்புகழ்ச்சியை கண்டு கைகொட்டி நகைப்பது நமக்கு தெரிகிறது.


### புதிய உறுப்பினர்



சுன்னகம் பட்டினசபையின் 4ம் வட்டார உறுப்பினர் டாக்டர் ஆ. நடராசா அண்மையில் தமிழரசுக் கட்சியில் உறுப்பினராகி, ஓர் இயங்கும் அங்கத்தவராகவும் தம்மைப்பதிவு செய்து கொண்டார்.

இடதுசாரிகளுடன் தமக்கிருந்த தொடர்பை துண்டித்துக்கொண்டு தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தமிழ் மக்களுக்கு சேவை புரிய முன் வந்திருக்கும் திரு. நடராசா அவர்களின் படத்தைத் தான் மேலே பார்க்கிறீர்கள்!


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

# ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு -14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடந்த இருபது ஆண்டுகளில் இப்போது தான் தமிழ் நாட்டில் முதன் முறையாகப் பொறுப்புள்ள—மக்கள் ஆதரவு நிறைந்த ஓர் அரசு ஏற்பட்டிருப்பதாக விஷயமறிந்த பொதுமக்கள் உணர்ந்துள்ளனர்; தமிழ் நாட்டு மக்களின் குன்றுத ஆதரவை இந்த ஆட்சி பெற்றுள்ளது.

'இந்த ஆட்சிக்கு எதிராக மத்திய அரசு நெருக்கடிகளை உருவாக்கி வருகிறது என்பதையும். சுப்பிரமணியம் தலைமை தாங்கும் தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டியும் நெருக்கடிகளை உருவாக்கி வருகிறது என்பதையும் பொது மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

'சேத் கோவிந்ததாஸ் போன்ற முட்டாள்தனமான—ஆத்திரமூட்டக்கூடிய வெறிபிடித்த காங்கிரசுக்காரர்களின் அறிக்கைகள், தி. மு. க. வுக்கு மென்மேலும் மக்கள் பலம் பெருகச் செய்யும். தேர்தல் களத்தில் உடல் முழுவதும் காயம் பட்டுள்ள காங்கிரசு, அவற்றை சாவகாசமாக ஆற்றிக் கொள்ளட்டும்!'

# தமிழ் நாடு காங்கிரசுக்கு ஓர் எச்சரிக்கை

# தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்த்தாலும் மீண்டும்மீண்டும் அண்ணாவே ஆட்சிக்குவருவார்!

இவ்வாறு புதுடெல்லியில் உள்ள ஆசிய ஆபிரிக்க சட்ட ஆய்வுரைக் குழுவில் நிபுணராகப் பணியாற்றும் திரு: பி. வேலாயுதம் என்பவர் 'ஹோம் ரூல்' ஆங்கில இதழில் எழுதியுள்ள ஓர் கட்டுரையில் கூறியுள்ளார்.

அக்கட்டுரை வருமாறு:-

'தமிழகத்தில், சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கத் தவறிவிட்டது, என்ற காரணம் காட்டி, தி. மு. கழக அரசைக் கவிழ்க்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதுபோலத் தெரிகிறது.

வடக்கத்திய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் காங்கிரசுக் கட்சி, தமிழ் நாட்டின் சில பகுதிகளில் தூண்டி விட்ட மொழிக் கலவரங்களைத் தவிர, தமிழகம் முன் எப்போதையும் விட அமைதியாகவே உள்ளது.

1967 பிப்ரவரிக்குட்பட்ட காலத்தில், நான் மூன்று முறை தமிழகத்துக்குச் சென்றிருந்த போதும், பெரும்பாலான பிற மாநிலங்களைக் காட்டிலும் தி. மு. கழக ஆட்சியின் கீழ் தமிழகத்தில் மிகவும் அமைதியான சூழ்நிலை நிலவுவதைக் கண்டேன்.

அரசைக் கவிழ்க்க நினைக்கும் எண்ணமே, தீய நோக்குடனும் தவறான ஆலோசனையின் பேரிலும் உருவானது என்பது தெரிகிறது.

இதைத் தமிழக மக்கள் கடுமையாகஎதிர்ப்பார்கள்.

தென்னக மக்கள் மட்டுமின்றி அனைத் திந்திய மக்கள் அனைவருமே நாட்டின் நிர்வாகம் அரசியல் சட்டத்தின்படி தடையின்றி நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் நிரந்தரமாக ஆட்சியில் இருப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவை அனைத்தையும் இயன்ற அளவுக்குச் செய்து வந்தார்கள்; ஆனால், பரிதாபகரமாக நான்காவது பொதுத்தேர்தலின் முடிவு அவர்களை நிலை கலங்கச் செய்துவிட்டது!

பல மாநிலங்களில் காங்கிரசின் மோசமான நிர்வாகத்தைக் கண்டு மக்கள் எரிச்சல் கொண்டனர்! அந்த எரிச்சலின் விளைவு தான் தேர்தல் முடிவுகள்!

காங்கிரசுக் கட்சி இப்போது பல்வேறு மாநிலங்களிலும் உள்ள காங்கிரசல்லாத அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கான வழிமுறைகளையும், தந்திரங்களையும் பின்பற்றி வருகிறது.

கூட்டுக் கட்சிகள் சேர்ந்து அரசாங்கம் அமைத்துள்ள மாநிலங்களில், காங்கிரசு மறைமுகமாகத் தலையிட்டுக் குழப்பத்தை உண்டுபண்ணி வருகிறது!

தானே ஆட்சிக்கு வந்து விட வேண்டும் என்பது அதன் எண்ணம்: அதற்கு, நியாயமாக இம் மாநிலங்களில் மறு தேர்தல் நடத்தி, மக்களின் விருப்பத்தை அறிய வேண்டும்!

மேற்கு வங்கம், தகுந்த பாடத்தை அளித்துள்ளது; அதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் தி. மு. கழகத்துக்கு நிறைந்த ஆதரவு கொடுத்து மக்கள் அதை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

தமிழக மக்கள், தமிழ் நாடு காங்கிரசுக் கட்சியின் மீதும், அதன் இலஞ்ச ஊழலும் திமிரும் பிடித்த தலைவர்கள் மீதும் கொண்டுள்ள வெறுப்பை ஒப்பற்ற முறையில் காட்டிவிட்டார்கள்!

தென்னாட்டைப் பொறுத்த வரையில்-குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில்—முன்பிருந்த காங்கிரசு அரசு, அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சி கொள்கைகளை மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ—அப்படியே முரட்டுத்தனமாகப் பின்பற்றி, மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டது!

தமிழ்நாடு காங்கிரசுக்கும்—மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பிளவு நாளுக்கு நாள் பெரிதாகிக்கொண்டே வருகிறது!

மாநிலத்தில் காங்கிரசு மிகத் திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்தியது என்றுகூறுவது முட்டாள் தனமாகும்!

தமிழகத்தை பொறுத்த வரையில், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நிர்வாகம் தூய்மையாகவும், திறமையாகவும், இலஞ்ச ஊழல் இன்றியும் இருந்தது என்று கருதுகிறார்கள்.

காங்கிரசுக் கட்சிதான் போலீசைத் துணைக்கு வைத்துக்கொண்டு கெடுபிடி ஆட்சி நடத்தியது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள்!

காங்கிரசு ஆட்சியின் போது தமிழகம் பஞ்சாபைப் போன்றோ, மற்ற வட இந்திய மாநிலங்களைப் போன்றோ, பெரிதாகப் பொருளாதார முன்னேற்றம் அடையவில்லை!

காங்கிரசுக் கட்சி பணம் கொடுத்து ஓட்டு வாங்கி, தனது வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்தது! தவறான போக்கினால் மக்களின் கழுத்தை நெறித்தது!

முழுக்க முழுக்கப் போலீசின் சக்தியை நம்பியே அது ஆட்சி நடத்தியது!

தேவையானால் இராணுவ உதவியும் அளிப்பதாகக் காங்கிரசுக் கட்சிக்கு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன!

இதுபோன்ற ஆட்சி முறைகள், பொதுவுடைமை நாட்டிலும், படிக்காதவர்கள் நாட்டிலும் வேண்டுமானால் நடைபெறக்கூடியதாக இருக்கலாம்: ஆனால் நிறைந்த படிப்பும், அறிவு ஆற்றலும் கொண்ட ஒரு மாநிலத்தில் அது நடக்குமா?

தங்கள் உரிமைகளை எப்படி நிலை நாட்டுவது என்பதை மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

வேதனையும் வெறுப்பும் அடைந்திருந்த மக்கள் தி. மு. கழக உதவியையும், தலைமையையும் நாடினார்கள்; அவ்வவாறே தி. மு. கவும், மக்களைக் காப்பாற்ற வந்துள்ளது.

ஒருகால் தி. மு. கழகத்தையும், திரு. அண்ணாத்துரையையும் ஆட்சியிலிருந்து நீக்கிவிட்டால், கூடுதல் வலிமையுடன் தி. மு. கழகத்தையும், அதன் தலைவர் அண்ணாதுரை அவர்களையும்தான், மக்கள், ஆட்சிக்கு அனுப்புவார்கள்.

நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருதி சி. சுப்பிரமணியமும் அவரது கட்சியும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்குறைகளைப் போக்கவும், மொழிப் பிரச்சினையில் நியாயமுறை காணவும் முயலவேண்டும்; அதைவிட்டு, 'ரௌடித்தனத்திலும், சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதும், மக்களை மேலும் ஆத்திரம் கொள்ளத்தான் செய்யும்'!

(2ம்-பக்கத் தொடர்ச்சி)

# நிறை

வீணாக என்னிலை ஐமிச்சப் படப் போகிறியள்' என்று இழுத்ததும்

'விசரி உள்ளதைச் சொன்னால் நானேன் உன்னிலை ஐமிச்சப்பட போகிறன்' என்று இந்த உலகில் திடீரென்று பற்றற்றவராகப் பதில் சொல்லிய ஐயர்... 'சீனியர் என்ன உருக்கத்திலை ஒண்டரை ருத்தல் சீனியைக் குடுத்துப்போட்டு ஒரு ருத்தல் சீனிக்கு காசெடுத்தவன்...?? என்று ஆழ நீளமாக மூளையைக் குடைந்தபடி தமது கழுத்தைக் கவனமாகத் தடவிப் பார்க்கின்றார்..

'நில்லுங்கோ..நானிதைக் கொண்டுபோய் சரியாய் நிறுப்பிச்சுக்கொண்'

'இப்ப இந்த இரா நேரம் அங்கையேன்?என்னத்துக்கு?? காலமைபோ .. அல்லாட்டி என்னட்டைத்தா..'

'அது சூட்டோடை சூடாய் நான்தான் போய் வரவேணும்...'

'......??? அது சூட்டோடை சூடாய் நான் தான் போய் வரவேணு'மென்ற மனைவியின் வார்த்தைக்கு தமக்குள் மறைமுகமாக அர்த்தம்விளங்கிக்கொண்ட ஐயர் குலைந்து கிடந்ததமது குடுமியைத் தட்டி இறுக்கி முடிந்துகொண்டபடி...கெதியாய்ப் போட்டோடி வா... நான் பாத்து வருவனென்று மனம்பொறுக்காமல் சொல்லிக் கொண்டதும்...ஐயரின் இந்த வார்த்தைகள் ஐயராக வழுத்துணைவர வாசுகி அம்மாள் சீனியரின் கடையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

'அம்மா...?என்னவும்...??'

'சீனியர்...இந்தச் சீனியை ஒருக்கா வடிவாய் நிறுத்துப் பார்...இந்தா பிடி...'

'...ஏனம்மா...? சரியாய் இதிலை ஒண்டரை ருத்தல் கிடக்குது...?'

'நீ எவ்வளவுக் கெண்டு காசெடுத்தனீ...'?

'ஒண்டரை ருத்தலுக்கு...?'

'சீனியற்றை சீனி யாவாரம் நல்லமுறையாய்த்தான் கிடக்குது.வடிவாய் யோசிச்சுப்பார் ... ஒரு ருத்தலுக்கல்லே காசெடுத்தனீ...இங்கைபார் உன்னட்டை வாங்கின மிச்சச் சில்லறையை...'

'...ஓமம்மா...?ஓமம்மா.?' எனக்கிப்ப மறதி கூடிப்'

'எனிமெலாவது வலு கவனமாய் நடவப்பா...இப்பிடி நாலு பேருக்கு அரை அரை ருத்தல் சீனியாய் மறந்து போய் நிறுத்து விட்டா... இப்ப எனக்கு ஒரு ருத்தலை நிறுத்துத்தா சீனியர்... நேரம் போச்சுது'

'இந்தாரும்...?'

'சரி நான் வாறன் சீனியர்...'

'...ஓமம்மா வாரும்...? அம்மா...??'

'...நான் உங்களுக்காகத் தானம்மா அரை ருத்தல் சீனிக்கும் காசெடுக்காமல் விட்'

'என்னசீனியர்...???'

தெய்வத்தின் புனிதமான திருமஞ்சனக் கிணற்றிற்குள் சாக்கடைநீர் வந்துவிழுந்து விட்ட கணக்காக ஒருகணம் தனக்குள்வெகுண்டெழுந்து சன்னதமாடி முடித்துக் கொண்ட வாசுகி அம்மாள் 'இதென்ன பிரளயம் சீனியர்...எனக்கு ஐயர் மலை போலை இருக்கிறா'ரென்று சொல்லியபடி விறுவிறு என்று வீட்டிற்கு வந்து விட்டதும்...

தமது மனைவிக்குத் தெரியாமல் சீனியரின் கடைப் பக்கமாக நின்று விட்டு மனைவியையும் முந்திக் கொண்டேபோனதும் தெரியாமல் வந்ததும் தெரியாமல் வீட்டுக்கு வந்து விட்ட ஐயர்... மனைவி போட்டு வைத்த தேநீரை கோப்பையோடு எடுத்து சீனி சர்க்கரை எதுவுமே தேவையற்றவராக தேவலோகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற தேவபானமாக வாய்ச்சுவையும் மனச்சுவையும் சொட்டச் சொட்ட மளமளவென்று பருகிக்கொண்டிருந்தார்.

(யாவும் கற்பனை)

## இவர்களின் எதிர்காலம் என்ன?

தமிழ் பேசும் கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஜூன் 30-ம் திகதிக்குப் பின் தங்கள் எதிர்காலம் என்னவென்று தெரியாது பீதியடைந்துள்ளனர். இதற்குக் காரணம் அவர்களது சேவையிலும் சிங்களம்புகுந்துள்ளதே.

அண்மையில் கூட்டுறவு திணைக்களத்தினால் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபம் ஒன்றில் இவ்வாண்டு ஜூன் மாதம் 30-ம்திகதிக்கு முன் சிங்களத்தில் சித்தியடைவதன் மூலம் சேவையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் தவறினால், ஜூலை மாதத்தில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி வேலை இழக்க நேரிடுமென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவாணன் பதில்கள்

வீ. எஸ். ஜெயமாறன்,
பதுளை.

எம், ஜி. ஆருடைய முகவரி என்ன?

எம். ஜி. ஆர். தோட்டம்
ராமாவரம்
சென்னை:

ஃ

முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

முத்துராமனின் பொழுதுபோக்கு என்ன?

கால்பந்தாட்டம் ஆடுவதும் ரசிப்பதும்!

:வெண்ணிற ஆடை' நிர்மலாவுக்கு திருமணம் நடந்து விட்டதா?

இல்லை!

ஃ

ஐ. நடேசன்
நெல்லியடி.

ரவி - ஜோதிலட்சுமியுடன் தனிக் குடித்தனம் நடத்துவது என்ற வதந்தி உண்மையா?

நெருப்பில்லாமல் புகை வருமா?

ஃ

ஜோ. இராஜன்
திருகோணமலை.

சரோஜாதேவி மீண்டும் எம். ஜி. ஆரோடு சேர்ந்து நடிப்பாரா?

திரையுலகில் நடக்க முடியாதது எதுவுமில்லை.

ஃ

ஜயா
பருத்தித்துறை.

கார்த்திகைத் தீபம் படம் இந்தியாவில் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டதா?

ஆம்!

ஃ

எ. தி. எக்டர்
கொழும்பு.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதுவரை எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

125 படங்களில்!

அடுத்ததாக வரவிருக்கும் சிவாஜி நடித்த படம் எது!

தில்லானுமோகனம்பாள்!

ஃ

ஆர். கண்ணன்
நீர்கொழும்பு.

கண்ணும்பாவைப் போல வசனம்பேசி நடிக்கக்கூடிய நடிகைகள் இப்போது யாராவது இருக்கிறார்களா?

இருக்கிறாரே நடிகை விஜயகுமாரி!

ஃ

சிந்தனைச் செல்வன்
ஏழாலை மேற்கு.

சிவாஜி - சாவித்திரி இருவரும் கடைசியாக நடித்த படமெது?

சரசுவதி சபதம்!

ஃ

சொல். அழகன்
கோட்டடி.

எங்க வீட்டுப் பிள்ளைக்கு 'கண்ணன் என் காதலன்' நூறுவது படமா?

இல்லை. ஜெமினியின் ஒளி விளக்கே அவரது நூறுவது படம்!

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 11 83.
கொழும்பு.

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: சிம்மக் குரலோன் சிவாஜிகணேசன் எந்தப் படத்திலாவது துப்பறியும் இன்ஸ்பெக்டராக நடித்திருக்கிறாரா?

ப: அப்படி நடித்ததாக தெரியவில்லை!

ஃ

ஆ. சி. சுப்பிரமணியம்,
கோப்பாய்.

கே: எம். ஜி. ஆர்.நடித்த 'நாடோடி' என்னும் படம் தென்னாட்டில் எங்கேயாவது 100 நாட்கள் ஓடியதா?

ப: இல்லை!

ஃ

க. யோகநாதன்,
கோப்பாய்,

கே: 'இரகசிய பொலீஸ் 115' பந்துலுவுக்கு வெற்றிப்படமா?

ப: வெற்றிபடமே!

கே: சரவணாவின் 'குடியிருந்த கோவில்' வசூலில் வெற்றிப்படமா? அது சென்னையில் 100 நாட்கள் ஓடுமா?

ப. வெற்றிகரமாக 100 நாட்கள் ஓடக்கூடிய படம் தான் குடியிருந்த கோவில்!

ஃ

எம். ஜி. ராமு,
நல்லூர்.

கே: மூதன் முதல் தமிழகத்திலே வசூலில் சாதனையை ஏற்படுத்திய சந்திரலேகாவை முறியடித்த படம் மக்கள் திலகத்தின் மதுரை வீரன். அதன் பின் வசூலில் 1965 வரை நாடோடி மன்னன். இன்று வரை வசூலில் சாதனை கொடைவள்ளல் எம். ஜி. ஆரின் எங்க வீட்டுப்பிள்ளை. சரிதானே?

ப: ஆம்!

ஃ

தாழையூர் நாகராஜன்,
தாளங்குடா.

கே: திருமணமான நடிகைகள் யாபேரும் இன்பகரமாக வாழ்க்கை நடத்துகிறார்களா?

ப: ஏன் அவர்கள் திருமணத்துக்கு முன் இன்ப வாழ்க்கை நடத்தவில்லையென்று நினைக்கிறீரோ?

ஃ

பா. தேவநேசம்,
மானிப்பாய்.

கே: மக்கள் திலகத்தின் ரகசியப் பொலிஸ் 115, குடியிருந்த கோவில் ஆகிய இரண்டு படங்களும் எத்தனை நாட்கள் ஓடியுள்ளன இந்தியாவில்?

ப: ரகசியப் பொலிஸ்115 90நாட்கள் ஓடியது. மார்ச் 15ல் திரையிடப்பட்ட குடியிருந்த கோயில் இன்னும் ஓடி முடியவில்லை!

ஃ

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

ப: தேங்காய் சீனிவாசன் சினிமாவில் நடிப்பதற்கு முன்னர் என்ன செய்து கொண்டிருந்தார்?

ப: நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். இப்பொழுதும் நடித்து வருகிறார்.

ஃ

க. யோ. ராசா,
அக்கரைப்பற்று.

கே: சிவாஜிகணேசன் ஏன் நன்கொடை கொடுப்பதில்லை?

ப: நன்கொடைக்கும் நடிப்புக்கும் எதுவித சம்பந்தமுமில்லாததால்!

## அத்தியாயம் 16

# டாக்டர் போட்ட திட்டம்

எதிர்பாராத சில சம்பவங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் எவருடைய சித்தமும் குழப்பம் அடையவே செய்யும். டாக்டர் சிவகுமார் கூறுவது கற்பனைக் கதையா? நடந்த கதையா? அல்லது பைத்தியக் கதையா? என்ற கேள்வியே கீதாவின் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

டாக்டர் கதையைக் கூறும்பொழுது திறமைசாலியான ஒரு நாடகக்கலைஞன் மேடையில் நேரில் தோன்றி நடிப்பது போன்றிருந்தது. டாக்டர் எதையோ சிந்தித்துவிட்டு மீண்டும் தொடர்ந்து கூறினர்.


'நான் வேறு ஒன்றும் பேசாமலே படுக்கையில் சென்று படுத்துக் கொண்டேன். அன்றிரவு அவள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள். மறுநாள் நான் வீட்டில் இருக்கவில்லை. விடிந்தெழுந்ததும் எனது பரிசோதனைக்குரிய சில பொருட்கள் வாங்கவேண்டியிருந்ததால் சென்று விட்டேன். மாலையில் வீடு திரும்பிய பொழுது மல்லிகா மிக தோன்றியது. ஆனால் நான் கண்டவை? அந்த நினைவு என் மனதில் தோன்றியதும் மனதை வைரமாக்கிக் கொண்டேன். மல்லிகா அடிக்கடி மணியைப் பார்த்துக் கொண்டாள். என்னுடைய பயங்கர பரிசோதனைக்கான பலவும் ஆயத்தம் செய்துவிட்டு மல்லிகாவைப் பார்த்தேன். அப்பொழுது அவள் கண்கள் கலங்கியிருந்தன. 'மல்லிகா' என்றேன். எனக்குத் துரோகம் செய்யப்போவதை எண்ணியோ என்னவோ அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

'அழாதே மல்லிகா எல்லாம் உன் கையில்தான், உன் கண்கள் கலங்குவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நீ ஏன் அழ வேண்டும். நீ விரும்பினால் மீண்டும் என்னை உயிருடன் எழுப்பலாம். புகழ் பெறச் செய்யலாம். இதோ இந்தப்போத்தலில் இரண்டு குளிகைகள் உள்ளன. ஒன்று சிவப்பு நிறமுடையது. மற்றது பச்சை நிறமுடையது. பச்சை பெண்களுக்குரியது. சிவப்பு ஆண்களுக்குரியது. இந்தக் குளிகைகளை வெளியில் எடுத்துக் கையில் அதிக நேரம் வைத்திருக்கப்படாது. எடுத்ததும் வாயில் போட்டுவிட வேண்டும். இக்குளிகைகளை நான் இந்தியாவில் இருந்த பொழுது ஒரு சித்தரிடம் பெற்றுக் கொண்டேன். இவற்றை உண்டால் நாம் இளமை மாறாது இருப்பதுடன் அதிக காலம் உயிர் வாழலாம். எங்கேயாயினும் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டாலும் எல்லாம் முடிந்துவிடும். நீ என் அருகிலேயே இருக்க இருக்க வேண்டும். என்ன தான் அவசரமாய் யாராவது கூப்பிட்டாலும் நீ இவ்விடம் விட்டு அகலப்படாது. ஞாபகமிருக்கட்டும். என்னுயிர் உன் கையில்தான்' என்று கூறிவிட்டுக் கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டேன்.

நான் படுத்துக் கொண்டு சரியாகப் பத்து நிமிடந்தானிருக்கும். வெளிக் கதவை யாரோ தட்டினர். மல்லிகா எனக்குச் சமீபமாக எழுந்து வந்தாள். நான் யோகப் பயிற்சி பெற்றிருந்த படியால் மூச்சை உள்ளடக்கிப் பிணம் போலக் கிடந்தேன்.

மல்லிகா நம்பிவிட்டாள். அவள் உள்ளத்தில் மற்றவன் மேல் வைத்த ஆசை வெறி என் உயிரை, என் சொல்லைப் பொருட்படுத்த விடவில்லை. ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். ஒரு நிமிடத்துக்கிடையில் அந்த வாலிபனுடன் அறையினுள் வந்தாள். எனக்கு உடம்பு பற்றி எரிவது போன்றிருந்தது. அவர்களைப் பார்த்ததும் கண்களை மூடிக் கொண்டேன். எதுவுமே கதைத்ததாகத் தெரியவில்லை. மணி ஒன்பது பதினைந்து அடித்தது. இருவரும் என் அருகே நடந்து வரும் ஒலிகேட்டது.

மூச்சை உள்ளடக்கிப் பிணம் போல் கிடந்தேன்.




வும் மகிழ்வுடன் காணப்பட்டாள். அவள் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி ரேகை படர்ந்திருந்தன. அவள் முகத்தைப் பார்த்து அவள் உள்ளக் கருத்தைப் புரிந்து கொள்ள முடிந்த போதும் என்னுயிருக்கு உலை வைக்கும் முயற்சியில் அவள் இறங்க மாட்டாள் என்றே எண்ணினேன், அன்றிரவு அவள் மிகுந்தவேதனையடைபவள் போல நடித்தாள். ஆமாம் சுத்த நடிப்பு என்பது எனக்குப் புரிந்திருந்தது. எல்லாவற்றிற்கும் விடியட்டும் என்று பொறுத்திருந்தேன்.

அன்றைய காலை வானம் மப்பும் மந்தாரமுமாக விருந்தது. என்னுள்ளத்தில் இருள் சூழ்ந்திருந்தது போன்று வானமும் கறுத்திருந்தது. எங்கள் படுக்கையறையை அடுத்திருந்த அறை அதாவது நீ படுத்திருந்த அறையில் உபகரணங்கள் சிலவற்றைப் பொருத்திவிட்டு ஒலிப்பதிவுக் கருவி ஒன்றையும் வைத்தேன். அப்போது மணி ஏழு அடித்தது. மல்லிகா புன்சிரிப்புடன் என் முன் வந்து நின்றாள். அவள் கண்களில் ஒரு புத்தொளி பிரகாசிப்பதை அவதானித்தேன். அந்தக் கண்கள் ஒரு பெண்ணின் கண்களாகவே எனக்குத் தோன்றவில்லை. எவரையும் மயக்கும் அழகு அவள் கண்களுக்கிருந்தது. அவளைப் பார்க்கும் பொழுது இவள் எனக்குத் துரோகம் செய்வாளா என்றே எண்ணத் மல்லிகா இந்தப் பரிசோதனைக்காகவே காத்திருந்தேன். பரிசோதனையில் வெற்றி கிடைத்தாற்றான் வெற்றி விழாப் பரிசாக நாமிருவரும் இதை உண்போம் என்றும் இளமை மாறாது இன்புற்று வாழ்வோம்.'

நான் இவ்வளவும் கூறுகையில் அவள் மூளை சிந்தனைப் பிரயாணத்திலீடுபட்டிருந்தது.'

'மல்லிகா! மல்லிகா! என்று மீண்டும் அவளை அழைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டேன். பின்பு ஒலிப்பதிவுக் கருவியைத் தட்டிவிட வேண்டிய முறைகளைக் காட்டினேன், மணி ஒன்பது அடிக்க ஐந்து நிமிடமே இருந்தது. மல்லிகா, நான் படுத்துக் கொண்டதும் பதினைந்து நிமிடத்தால் இறந்து விடுவேன். அதன் பின்பு சரியாக ஐந்து நிமிடம் கழித்து ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கிவிடு மிகுதியை அக்கருவியில் பதிவு செய்யப்பட்ட என் குரல் உனக்கு அறிவித்துக்கொண்டேயிருக்கும். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு இந்தப் போத்தலிலுள்ள நீரை என் வாய்க்குள் ஊற்றிவிட வேண்டும். நான் மீண்டும் உயிர் பெறுவேன். இல்லையெனில் அதுவே என்கடைசியாகிவிடும். மல்லிகா இந்தக் காம்பவுண்டுக்குள் வேலைக்காரனையே வரக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறேன். ஏன் தெரியுமா யாராவது இருந்தால் நீ மறந்து ஒரு நிமிடமாவது

'தொலைந்தான் டாக்டர்' என்று அந்த வாலிபன் கூறியதும் மல்லிகாவும் சேர்ந்து சிரித்தாள். அடுத்த ஐந்து நிமிடமும் கழியும்வரை மூச்சை அடக்கியிருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். சில நிமிட நேரம் மௌனமாகவே கழிந்தது. பின்பு மல்லிகா கதைக்கும் குரல் கேட்டது.

'பாஸ்கர் ஒன்பது இருபதுக்கு ரேப்ரிக்காடரை முடுக்கிவிட வேண்டும்என்றாள்.'

'இன்னும் ஒரு நிமிடம் இருக்கே' என்றான் அந்த வாலிபன்.

'ஒரு நிமிடம் முந்தித் தான் போட்டுப் பார்ப்போமே' என்று கூறினாள் மல்லிகா.

அதைத் தொடர்ந்து மல்லிகா ஒலிப்பதிவுக் கருவியை நோக்கிச் செல்லும் காலடி ஓசை கேட்டது. காலடி ஓசைநின்றதும் ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கிவிடும் ஓசையும் தொடர்ந்து அது இரையும் ஓசையும் கேட்டது. ஒரு நிமிடம்வரை எந்தவித ஓசையும் இல்லை.

'என்ன மல்லிகா ஒன்றும் கேட்கவில்லையே' என்று பாஸ்கர் கூறினான். அவன் அப்படிச் சொல்லி முடிப்பதற்குள் ஒலிப்பதிவுக் கருவியில் என் குரல் ஒலிக்கத் தொடங்கியது' என்று கூறிவிட்டு கீதாவின் முகத்தைப் பார்த்தார் டாக்டர்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான இரண்டாவது மாதம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஈஸ்வரன் (கிளிநொச்சி) ஆனந்த (மன்னார்) ஈஸ்டர்ன் (சம்மாந்துறை) சீகிரி (பண்டாரவளை) ஆனந்த (கம்பளை)

* எம். ஜி. ஆர், * கே. ஆர். விஜயா, * விஜயகுமாரி, * நாகேஷ்,
* மனோரமா, * நம்பியார் மற்றும் பலர் நடித்த

டைரக்ஷன்
எம்.ஏ.திருமுகம்

# விவசாயி

## எமது அடுத்த வெளியீடு!

நான் யார் தெரியுமா? என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு ஒரு இளைஞன் சென்னையிலிருந்து பம்பாய்க்கு ஒரு முக்கிய வேலையாகச் செல்கிறான். அவனுக்கு நேர்ந்த கதி! பொறுத்திருந்து பார்க்கத்தவறாதீர்கள்
புதுமையான கதை! விறுவிறுப்பான காட்சிகள்!! அசல் ஜேம்ஸ்பொண்ட் நவீனம்!!!

★ ஜெய்சங்கர், ★ ராதிகா ★ பாரதி ★ சோ மற்றும் பலர் நடிக்கும்

# நான் யார் தெரியுமா?


—டைரக்ஷன் வீ. வி. ராமன்—

## இப்பொழுது காட்சியளிக்கிறது!

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) அசோகா (புத்தளம்) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை)
காசினோ (மாத்தளை) ஸ்ரீ முருகன் (வவுனியா) வின்சர் (யாழ்நகர்)

* ரவிச்சந்திரன் * ஜெயலலிதா * நாகேஷ்
* அசோகன் * நம்பியார் * மனோரமா

# மகராசி



## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெபிட்டி (கொழும்பு)

எம். ஜி ஆர், பத்மினி,
பானுமதி, கிருஷ்ணன்,
மதுரம் நடித்த


# மதுரை வீரன்

## இப்பொழுது வெற்றி முழக்கமிடுகிறான்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (அட்டன்) மொடேன் (பதுளை)

ஜெய்சங்கர், விஜயலட்சுமி மனோகர்
ஸ்ரீராம் ஷீலா விஜயலிதா புஷ்பமாலா
தேங்காய் சீனிவாசன் பக்கிரிசாமி நடித்த

# வல்லவன்ஒருவன்



5-வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)

# பெற்றால்தான் பிள்ளையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் மே மாதம் 11-ந்திகதி சனிக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.